DEPOSITION OF WITNESS
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )
**O.S.No. 75/2014**

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW 3 |
| Name | : திருமதி.மீனா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 23.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 23rd February 2026

முதல்விசாரணை :

நான் சங்கரன்கோவில் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். சங்கரன்கோவில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மு.வ.எண்.75/2014 வழக்கில் ஆணையர் நியமனம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வ.வி.எண்.2/2022 என்ற மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் அம்மனுவில் கண்டுள்ள தபசில் சொத்துக்களை பார்வையிட்டு அளந்து அது குறித்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஆணையராக நான் நியமிக்கப்பட்டேன். அதன்பேரில் மனு தபசில் சொத்துக்களை பார்வையிட்டு அளந்து அது குறித்து அறிக்கை மற்றும் வரைபடத்தை 02.03.2024 அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். தற்போது வ.வி.எண்.6/2025 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில் இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு இந்நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன்.

**வாதி தரப்பில் விசாரணை**

நான் நீதிமன்றத்தில் எனது அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ள வாரண்டின் அடிப்படையில்தான் மனு தபசில் சொத்துக்களை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் 9 வது பாராவில்

புல எண்.37/2 தற்போது புல எண்.37/2A, 2B, 5, 6, 7 மற்றும் 9 ஆக உட்பிரிவு செயயப்பட்டுள்ளது என்றும், இதில் தென்கடைசி 62 சென்ட் நிலத்தை தனியாக பிரிவினை செய்வதற்கு ஸ்தலத்தில் அமைப்புகள் அமைந்திருக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் எனக்கு அளிக்கப்பட்ட வாரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள பிராது தபசில் சொத்து, எதிர்கோரிக்கை 1 மற்றும் 2 தபசில் சொத்துக்களை தனித்தனியாக அளவீடு செய்து அந்த 3 சொத்துக்களின் மால்களையும் தனித்தனியாக விவரித்து அறிக்கையில் கூறியுள்ளேனா என்றால் அறிக்கையில் அந்த சொத்துக்களின் மால்களை தனித்தனியாக விவரித்து கூறவில்லை. பிராது தபசில் சொத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ள மால்களுக்குள் பிராது தபசில் சொத்து அமைந்துள்ளதாக எனது அறிக்கையில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. எதிர்கோரிக்கை 2ம் தபசில் சொத்து ஸ்தலத்தில் உள்ளதா என்பது பற்றி எனது அறிக்கையில் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. எனது அறிக்கை 3வது பாராவில் வழக்குரை தபசில் சொத்தானது தேவர்குளம் கிராமம் பழைய அயன்புஞ்சை சர்வே எண்.37/2 தற்போது புதிய சர்வே எண்.37/6ல் உள்ளதாக கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சர்வே எண்.37/6ல் உள்ள இடத்தை பல கோணங்களில் அளந்து அதன் நீள அகல அளவுகளை சரிபார்த்ததாக எனது அறிக்கையில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளதா என்றால் எனதுஅறிக்கைக்கு தேவை என்பதால் அவ்வாறு கூறியுள்ளேன். எனது அறிக்கை பாரா 6ல் புலஎண்.37/6 ல் உள்ள 5 சென்டை அடுத்து சி1 சி2 டி2 புள்ளிகளுக்கு தெற்கு எனது பார்வையின்போது முழுமையாக கிழக்கிலிருநது மேற்கு வரை காலிமனையும், அதற்கு மேற்குபக்கம் வீடும் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி காலிமனையும், வீடும் எந்த சர்வே எண்களில் உள்ளன என்பது பற்றியும், அவற்றின் விஸ்தீரணம் பற்றியும் எனது அறிக்கையில் நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் சி என்று காட்டப்பட்டுள்ள புள்ளியில் சுவர் இடித்து அகற்றப்பட்ட நிலையில் இருப்பதாக நான் அறிக்கையில் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. எனது அறிக்கையில் 5வது பாராவில் A B C1 D1 என குறிப்பிடப்பட்டுள்ள பகுதிக்குள் வடகடைசி கான்கிரீட் வீடும், அதனை ஒட்டியே தென்பக்கம் ஓட்டுசாய்வு கொண்ட அமைப்பும் காணப்பட்டது என கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி

ஓட்டுசாய்வை நான் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான். D4 D3 D Y1 ஆகிய புள்ளிகளுக்குள் பகுதியில் உள்ள இயற்கை தன்மைகள் பற்றி எனது அறிக்கையில் கூறவில்லை என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

எனது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள D4 D3 D Y1 ஆகிய புள்ளிகளுக்குள் உள்ள பகுதி மனு தபசில் சொத்துக்கள் அல்லாத வேறு இடத்தில் உள்ளது என்றால் சரிதான். பிராது தபசில் சொத்து மற்றும் எதிர்கோரிக்கை தபசில் சொத்துக்கள் வெவ்வேறு உட்பிரிவுகளில் அமைந்துள்ளன என்றால் சரிதான். மேற்படி உட்பிரிவுகளில் உள்ள மேற்கண்ட சொத்துக்களை சர்வேயர் உதவியுடன் அளந்து அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**